2010 மே 12]

செய்து, அந்தச் சாலையைப் பயன்படுத்திக்கொள்ளலாம். அவர் குறிப்பிட்டிருக்கின்ற, அதே தொகுதியில் இருக்கின்ற இன்னொரு சாலை, அனுமதிக்கப்பட்ட வழித்தடமாக இருந்தால், அதை அனுமதிப்பார்கள். இல்லை என்று சொன்னால், வனப் பாதுகாப்புச் சட்டப்படி அவர்கள் அதற்குரிய விண்ணப்பத்தை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கொடுத்தால், அது பரிசீலிக்கப்பட்டு உரிய முறையில் நடவடிக்கை எடுக்கப்படும். அதைப்போல, அவருடைய அரச்சலூர் பகுதியிலே, மொடக்குறிச்சி தொகுதியிலே முருகன் கோயில் செல்வதற்குப் பாதை தடைப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். வனப் பகுதியிலே சாலை அமைப்பது என்றால், வனப் பாதுகாப்புச் சட்டத்தினுடைய அந்தக் கோட்பாடுகளை எல்லாம் அனுசரித்துத்தான் அதை அமைக்க முடியும். எனவே, மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அவர் அதற்கான கோரிக்கையை விடுத்து, அதன்மூலம் அதை நிறைவேற்றவும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 179, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

179—

புதிய பாலம்

***57978—திரு. தி. வேல்முருகன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பண்ருட்டி தொகுதி, வடக்குத்து கிராமத்தில் புதிய பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தேசிய நெடுஞ்சாலை எண் 45-சி-ல் அமைந்துள்ள சாலை மற்றும் பாலங்கள் ஆகியவற்றை மேம்பாடு செய்வதற்கான விரிவான திட்ட அறிக்கை இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் தயாரிக்கப்பட்டு வருகிறது. திட்ட அறிக்கையின்மீது

மைய அரசின் ஒப்புதல் பெறப்பட்ட பின்னர், தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால், பண்ருட்டி தொகுதி, வடக்குத்து கிராமத்தில் அமைந்துள்ள பாலத்தைப் புதிதாகக் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் தஞ்சாவூர் திட்ட இயக்குநருடைய தகவல் தெரிவித்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஆண்டுக்கு ஆண்டு சாலை விபத்துகள் என்பது அதிகமாகி, கடந்த ஆண்டு 12,000 பேர் உயிரிழப்பு, இந்த ஆண்டு 13 ஆயிரத்து 400-க்கும் மேற்பட்ட உயிர் இழப்பு, வரும் ஆண்டுகளில் அது 15 ஆயிரத்தைத் தாண்டும் என்கிற அளவில் விபத்துகள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. இது குறித்து நம்முடைய தமிழக முதல்வர்கூட ஆழ்ந்த கவலை தெரிவித்து இருக்கிறார்கள். ஆக, அந்த வகையில், சென்னை-பண்ருட்டி-கும்பகோணம், சாலையில் அடிக்கடி விபத்து ஏற்பட்டு, ஆண்டு ஒன்றுக்கு 10-க்கும் மேற்பட்ட உயிர் இழப்புகள் ஏற்படுகின்றன. இதுகுறித்து நான் ஏற்கெனவே கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்துக் கேட்டபோது, தமிழக அரசால் இந்தப் பாலம் கட்டித் தரப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சருடைய அறிவிப்பில், நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இடம் பெற்ற பாலம். அதற்குப் பிறகு கடந்த ஆண்டுதான் அது தேசிய நெடுஞ்சாலைத் துறையால் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. நீங்கள் அறிவித்தவுடனேயே அந்தப் பாலப் பணிகளைத் தொடங்கியிருந்தால், இந்த விபத்துகளைக் குறைத்திருக்கலாம். ஏற்கெனவே அதற்காக மிகப் பெரிய சாலை மறியல் எல்லாம் நடந்து, திட்ட இயக்குநரோடு ஒரு ஒப்பந்தம் போடப்பட்டு, மூன்று மாதங்களில் பாலப் பணிகள் தொடங்கும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியும், தொடங்கவில்லை. ஆதலால் அங்கு பல்வேறு உயிர் இழப்புகள் ஏற்படுகின்ற காரணத்தால், அந்த அவசிய, அவசரத்தை உணர்ந்து, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் மத்திய அரசை அணுகி, உடனடியாகப் பாலம் கட்டுவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

2010 மே 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் என்னுடைய கவனத்திற்கு இந்தப் பிரச்சினையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதேபோல, அந்த மாவட்டத்தினுடைய அமைச்சர் என்கிற முறையிலே மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் அந்தப் பாலப் பிரச்சினையை என்னுடைய கவனத்திற்குப் பல முறை கொண்டு வந்திருக்கிறார்கள். இது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, கடந்த ஆண்டு இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்கு மாற்றப்பட்ட சாலை அல்ல. இந்தச் சாலை தேசிய நெடுஞ்சாலை 45-ல் விக்கிரவாண்டியில் இருந்து பிரிந்து தஞ்சாவூர் வரை அது தேசிய நெடுஞ்சாலையாக வகைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது, விக்கிரவாண்டி-கும்பகோணம்-தஞ்சாவூர் சாலை என்று. அந்தச் சாலை, தேசிய நெடுஞ்சாலையாக மாற்றப்பட்டபொழுது, மத்திய அரசினுடைய நிதியைப் பெற்று, மாநில அரசால் பராமரிக்கப்படும் சாலையாக துவக்கத்தில் இருந்தது. அந்த அடிப்படையில் அதுபோன்ற சாலைகளை மேம்பாடு செய்வதற்குக் கருத்துரு அனுப்பப்பட்டிருந்தது. அதற்குப் பிறகு, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்கு இது மாற்றப்பட்டு, 10 மீட்டர் அகலம் கொண்ட சாலைகளாக மாற்றக்கூடிய செயற்குறிப்பிலே இந்தச் சாலையும் இடம் பெற்றிருக்கிறது. இந்தச் சாலையை 10 மீட்டர் அகலமாகவும், அதேபோல அதில் இருக்கக்கூடிய culvert-கள், பாலங்கள், பெரிய பாலங்களை எல்லாம் 10 மீட்டர் அளவுக்கும்—குறைந்தபட்சம் 10 மீட்டர் அளவிற்காவது அகலப்படுத்துவதற்குரிய விரிவான திட்ட அறிக்கையும் அளிக்கப்பட்டுள்ளது. அதேபோல, பண்ருட்டி நகரத்தில்கூட இரயில்வே கடவிலே வரக்கூடிய சாலை மேம்பாலம்கூட மாநில அரசின் பரிந்துரையின்பேரில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அந்தச் சாலைகள் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் அகலப்படுத்தப்பட வேண்டுமென்று மாநில அரசின் மூலமாக மத்திய அரசினுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்றிருக்கிறோம். எனவே, எதிர்காலத்தில் அதுவும் குறைந்தபட்சம் 10 மீட்டர் அகலமாக இருக்க வேண்டும் என்பதற்காக இதுபோன்ற பணிகளை மேற்கொள்ள மாநில அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

நம்முடைய மாண்புமிகு சுற்றுலாத் துறையினுடைய அமைச்சர் அவர்களுடைய மாவட்டத்திலே, அங்கே செங்கட்டிப் பாலம் என்கிற பாலம், சாலையைவிடக் குறுகலான பாலமாக இருக்கிறது.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: சாலை 7 மீட்டர் அகலமாக இருக்கிறது, பாலம் 5½ மீட்டர் அகலமாக மட்டுமே அமைந்திருக்கிறது. அதனால்தான் விபத்துகள் அதிகமாக நடக்கின்றன. இதுபோல, மாநில அரசின்கீழ் வருகிற சாலைகளை அகலப்படுத்தி வருகிறோம். இதைத் தொடர்ந்து வலியுறுத்தி, இந்தப் பாலம் அகலப் பாலமாக அமைவதற்கும், 10 மீட்டர் சாலையாக அமைகிற நேரத்தில், புதிய பாலம் கட்டுவதற்கும் வலியுறுத்துவோம். இருந்தாலும், இதற்கிடையிலே மத்திய அரசிடமிருந்து C.R. fund-ன் மூலமாக நிதியைப் பெற்று, இடையிலே விரைவாக அந்தப் பாலம் அமைவதற்குத் தொடர்ந்து மாநில அரசு வலியுறுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனித உயிர்களின் இழப்பைத் தடுக்கின்ற வகையில், மத்திய அரசினுடைய நிதியைப் பெற்று விரைவாக இந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்கிற அளவில் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலை நான் வரவேற்கிறேன். மேலும், மத்திய இரயில்வே துறையில் அமைச்சராக எங்களுடைய மாண்புமிகு திரு. அரங்க. வேலு அவர்கள் இருக்கின்றபொழுது, கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக, பண்ருட்டியினுடைய இரயில்வே மேம்பாலம் அதுவும் சென்னை-கும்பகோணம் சாலையில் வருகிறது. இந்தப் பக்கம் 5 கிலோ மீட்டர், அந்தப் பக்கம் 5 கிலோ மீட்டர், மிகப் பெரிய traffic jam ஏற்படுகின்ற காரணத்தினாலும், பண்ருட்டி நகர வீதி என்பது குறுகிய வீதி என்கிற காரணத்தினாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஏற்கெனவே மண் பரிசோதனை எடுத்துச் செய்யப்பட்டு, தமிழ்நாடு அரசினுடைய பங்களிப்புத் தொகையும், மத்திய

2010 மே 12]

அரசினுடைய ஒப்புதலும் பெற்று, சாலை மேம்பாட்டு ஆணையத்தின் ஒப்புதலுக்காகக் காத்திருக்கிறது என்ற செய்தியைச் சொன்னார்கள். அந்தப் பாலத்தையும், பண்ருட்டிக்கான இரயில்வே மேம்பாலத்தையும், இதேபோன்று விபத்துகள் ஏற்படுகின்ற காரணத்தினால், இந்த இரண்டு பாலங்களையும், இரயில்வே மேம்பாலத்தையும் போர்க் கால அடிப்படையில் மத்திய அரசை அணுகி, உடனடியாகக் கட்டித் தருவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்களின்வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடவில்லை என்று சொன்னாலும், அந்தச் சாலையிலே வரக்கூடிய, பண்ருட்டி நகரத்திலே இரயில்வே கடவிலே சாலை மேம்பாலம் மாநில அரசின் பட்டியலிலே இடம்பெற்றிருக்கிறது. ஆனால், இப்பொழுது அந்தச் சாலை இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் பராமரிப்பில் இருக்கின்ற காரணத்தினால், இதுபோன்ற செலவுகள் மேற்கொண்டால், எதிர்காலத்தில் Audit—தணிக்கைக் குழுவினுடைய எதிர்ப்பு வரும் என்பதால், மாநில அரசால் செலவு செய்ய இயலாது. எனவேதான் நாங்கள் வலியுறுத்தியிருக்கிறோம். இரயில்வே துறைக்கும் தகவல் சொல்லியிருக்கிறோம். அந்தச் சாலை 10 மீட்டர் அகலமாக மாற்றப்பட இருக்கிறது. எனவே, அந்த இரயில்வே கடவிலே கட்டப்பட இருக்கின்ற சாலை மேம்பாலத்தினுடைய அகலமும் அதுபோலவே இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். இதற்கிடையில், மாநில அரசும் இரயில்வே துறைக்கும் தகவல் தெரிவித்திருக்கிறது. எனவே, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் விரிவான திட்ட அறிக்கையைத் தயார் செய்யும்போது, இரயில்வே கடவினைக் கடக்கக்கூடிய சாலை மேம்பாலமும் நிச்சயமாக, விரைவாக அமையும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. தங்கமணி.

திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலங்கள் கட்டுவதற்கு எந்த அடிப்படையில் முன்னுரிமை

கொடுக்கப்படுகிறது? முதலிலே போக்குவரத்து அதிகமாக இருக்கக்கூடிய பகுதிகளுக்கா? புறவழிச் சாலைகளுக்கா? புதிய சாலைகளுக்கா? ஏனென்றால், 4 ஆண்டு காலமாக, ஈரோட்டில் பள்ளிப்பாளையம் என்ற இடத்தில் காவிரி ஆற்றின் குறுக்கே கூடுதல் பாலம் ஒன்று கேட்டுக்கொண்டிருக்கின்றேன். அதிலே போக்குவரத்து அதிகமாக உள்ள காரணத்தினால், ஒரு விபத்து ஏற்பட்டால்கூட 5 மணி நேரம், 6 மணி நேரம் போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்படுகிறது என்பது மாண்புமிகு அமைச்சருக்கு நன்றாகத் தெரியும். அது மட்டுமல்லாமல், ஈரோடு பகுதி வியாபார மையமாக இருக்கின்ற காரணத்தினால், எத்தனை சுற்றுப் பாலங்கள் போட்டாலும், அந்த இடத்திலே கூடுதல் பாலம் அமைத்தால் மட்டும்தான் போக்குவரத்து நெரிசல் குறையும் என்பதும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். இந்த ஆண்டு அங்கு கூடுதல் பாலம் அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு நகரத்திலிருந்து சேலத்தை நோக்கியோ அல்லது திருச்செங்கோடு பகுதிக்கோ போக வேண்டுமென்று சொன்னால், அந்தப் பள்ளிப்பாளையம் பகுதியில் இருக்கக்கூடிய பழைய பாலத்தைத்தான் கடந்து செல்ல வேண்டும். அந்தப் பாலத்தில் இருக்கக்கூடிய போக்குவரத்தினுடைய சூழ்நிலையையும் நான் அறிவேன். மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞருடைய அரசு வந்த பிறகு, இப்போது ஈரோடு பகுதியிலிருந்தோ, அதன் தென்பகுதியிலிருந்தோ திருச்செங்கோட்டிற்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், செல்பவர்களுக்கு, இப்போது ஈரோடு மாவட்டத்தையும், நாமக்கல் மாவட்டத்தையும் இணைக்கக்கூடிய அளவிலே, கொக்கராயன்பேட்டையிலே ஒரு பாலம் அமைக்கப்பட இருக்கிறது. எனவே, திருச்செங்கோடு செல்ல வேண்டியவர்கள் இனி பள்ளிப்பாளையம் வழியாகச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை என்ற சூழ்நிலை ஏற்படுகிறது. அந்தப் புதிய பாலம் கட்டுவதற்கும், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற பள்ளிப்பாளையம் பாலத்திற்கும் இடையிலே, தமிழ்நாடு மின்சார வாரியத்தால் நீர் மின் நிலையம் அமைப்பதற்கு barrage கட்டப்பட்டு வருகிறது.

2010 மே 12]

அதிலேயும் மாநில அரசு நெடுஞ்சாலைத் துறைமூலமாக வைப்புத் தொகை செலுத்த இருக்கிறோம். அங்கே 7 மீட்டர் அகலம் கொண்ட பாலம் அமைக்க இருக்கிறார்கள். எனவே அந்த அடிப்படையில், அதுவும் போக்குவரத்திற்கு உகந்த பாலமாக, பள்ளிப்பாளையம் பாலத்திற்கு அருகிலேயே அமைய இருக்கிறது என்ற தகவலையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும், இதெல்லாம் அமைக்கப்பட்ட பிறகும் அதிலே போக்குவரத்து தொடர்ந்து அதிகமாக இருக்கும்பட்சத்தில், நிதிநிலைக்கேற்ப அங்கே புதிய பாலம் கட்டுவதற்கு அரசு தொடர்ந்து பரிசீலிக்கும். மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பாலம் கட்டுவதற்குரிய விதிமுறையைக் கேட்டார்கள். நீர் வழிப் புறம்போக்கிலே இதுபோன்ற பாலங்களைக் கேட்கிற நேரத்திலே, மக்களுடைய கோரிக்கையை, அதேபோல, மக்கள் பிரதிநிதிகளின் கோரிக்கைக்கேற்ப, தேவைப்படுகின்ற இடங்களிலே பாலங்கள் அமைக்கிறோம். இரயில்வே கடவினைப் பொறுத்தவரையிலே, நான் ஏற்கெனவே பல முறை சொல்லியிருக்கிறேன். அந்த இரயில்வே கடவிலே செல்லக்கூடிய இரயில்களுடைய எண்ணிக்கையையும், சாலைகளிலே செல்லக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கையையும் பெருக்கினால், நாளொன்றுக்கு 1 இலட்சம் Train vehicle unit என்ற கணக்கு வரவேண்டும். அப்பொழுதுதான் மத்திய அரசு மாநில அரசுக்குப் பரிந்துரை செய்யும். 'இதெல்லாம் தகுதி பெறுகிறது, இதில் உங்களுடைய கருத்து என்ன' என்று கேட்பார்கள். ஏனென்று சொன்னால், 50 சதவிகிதப் பங்குத் தொகையை மாநில அரசு செலுத்த வேண்டும். அதற்காக, அப்படிச் செலுத்துகின்ற நேரத்திலே அந்த ஒப்புதலை அனுப்புகிறோம். அப்படித்தான் கடந்த 5 ஆண்டு காலத்திலே 105 பாலங்களுக்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒப்புதல் தந்திருக்கிறார். மாநில அரசால் அனைத்துப் பாலங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அனுமதி தரப்பட்டிருக்கிறது.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் மேட்டூர் அணைக்குக் கீழே இருக்கிற

[2010 மே 12

காவரிப் பாலம், மேட்டூர் அணை கட்டியபோது வெள்ளைக்காரன் காலத்திலே கட்டப்பட்ட பாலம். அது அடிக்கடிப் பழுதடைந்து, போக்குவரத்திற்கெல்லாம் இடையூறு ஏற்பட்டு, பாலங்களைப் புதுப்பிக்கிற பணியாக அவ்வப்போது சிறு, சிறு பணிகளையெல்லாம் செய்து வந்தாலும்கூட, பாலம் அடிக்கடிப் பழுதடைகிறது; போக்குவரத்திற்கு இடையூறாக இருக்கிறது. 'இந்தப் பாலத்திற்குப் பதிலாகப் புதிய பாலம் கட்டப்படுமா' என்று நான் பல முறை சட்டமன்றத்திலே கேள்வி கேட்ட நேரத்தில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 'விரைவில் பரிசீலிக்கப்படும், நடவடிக்கை எடுக்கப்படும்' என்று சொன்னார்கள். இருந்தும்கூட தொடர்ந்து அதே நிலை நீடிக்கின்ற காரணத்தினாலே, போக்குவரத்தைச் சீர் செய்கிற வகையில், பழுதடைந்துள்ள அந்தக் காவரிப் பாலத்தைப் புதுப்பிப்பதற்கு அல்லது புதிய பாலமாவது கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற பாலத்தின் வழியாக நாங்கள் அடிக்கடி சென்றிருக்கிறோம். சென்னை போன்ற பகுதிகளுக்கு வர வேண்டுமென்று சொன்னால், மாநிலத்தினுடைய மேற்குப் பகுதியிலேயிருந்து அந்தப் பாலம் வழியாகத்தான் நாங்கள் வருவோம். அது பழுதடைந்திருக்கிறது என்பது உண்மைதான். இருந்தாலும், இப்பொழுது போக்குவரத்திற்கு ஏற்ற வகையிலே இருக்கிறது. அதனுடைய கட்டுமானமும் ஸ்திரத் தன்மையுடன் உள்ளது. அதை ஆய்வு செய்திருக்கிறோம். எனவே, தற்சமயத்திற்குத் தேவையில்லை என்று சொன்னாலும், எதிர்காலத்திலே புதுப்பிக்கப்பட வேண்டிய பாலம்தான், நியாயமான கோரிக்கை. எனவே, பாலத்தைப் பொறுத்த அளவில், மாநில அரசு நிதியை வழங்கினால், அரசு வழங்கக்கூடிய நிதியில் பெரும்பாலான நிதி பாலங்களுக்கே சென்றுவிடும். எனவே, சாலைகளைப் பராமரிக்கிற பணி நின்றுவிடும்; அகலப்படுத்துகிற பணி தடைப்பட்டுவிடும். எனவேதான், பகுதி, பகுதியாக எடுக்கப்படுகிறது. கூடுதலாக நபார்டு வங்கியினுடைய கடனுதவி பெற்று மாநில அரசு சில பாலங்களை அமைத்து வருகிறது. அந்தப் பட்டியலை அனுப்பும்போது, நிச்சயமாக எதிர்காலத்திலே அந்தப் பாலம்

2010 மே 12]

அமைவதற்கு, நபார்டு வங்கியினுடைய ஒப்புதலுக்கு அனுப்பப்படுகிற பட்டியலிலே அந்தப் பாலம் இடம்பெறும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 180, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.*

180—

மென்பொருள் பூங்கா

***22099—திரு. எஸ். ஜெயபால்:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் மென்பொருள் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கன்னியாகுமரி மாவட்டத்தில் மென்பொருள் பூங்கா அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால்.*

திரு. எஸ். ஜெயபால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் படித்தவர்கள் அதிகம் நிறைந்த மாவட்டம். ஆனால் அதே வேளையில், வேலைவாய்ப்பில், தொழில் வளர்ச்சியில் மிகவும் பின்தங்கிய மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டம். எனவே, கன்னியாகுமரி மாவட்டத்தில் மென்பொருள் பூங்கா அமைத்தால், அங்கே பல்லாயிரக்கணக்கான கணினி அறிவியல் கல்வி கற்ற மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்கின்ற ஓர் எதிர்பார்ப்பு இருந்துகொண்டிருக்கிறது. எனவே, அமைச்சர் அவர்கள் அந்த மாவட்டத்தின் சூழ்நிலையைக் கருதி, தன்னுடைய பதிலை மறுபரிசீலனை செய்து, கன்னியாகுமரி மாவட்டத்தில் மென்பொருள் பூங்கா அமைப்பதற்கு வழிவகை செய்வார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.*